DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 170/2022 Crime No. 184/2022 Station Appakodal

| | | | |
|---|---|---|---|
| Name | PW-4/LW9- மேகலா | Village | |
| Husband's Name | நல்லசிவம் | Taluk | |
| Age | 30 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 06.09.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் தற்பொழுது பெரியபுலியூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் ஆப்பக்கூடல் கிராம நிர்வாக அலுவலராக பணியிலிருந்தபோது கடந்த 27.08.2022 ம் தேதியன்று, காலை சுமார் 11.45 மணியளவில், ஆப்பக்கூடல் காவல் நிலையத்திலிருந்து தொலைபேசி மூலம் என்னை தொடர்பு கொண்டு ஒரு திருட்டு வழக்கில் எதிரியை கைது செய்து, காவல் நிலையத்தில் வைத்துள்ளதாகவும், அவர் தானாக முன் வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க இருப்பதாகவும், அதற்கு சாட்சியாக இருப்பதற்காக என்னை வருமாறு கூறினார்கள். நானும், எனது உதவியாளரும் அன்றைய தினம் காலை 11.55 மணிக்கு, காவல் நிலையம் சென்றோம். அப்போது காவல் நிலையத்தில் ஆஜர் எதிரி இருந்தார்.

எதிரி அன்றைய தினம் மதியம் சுமார் 12.15 மணி முதல் 1 மணி நேரம் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், எனது உதவியாளரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அவர் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கருப்பக்கவுண்டன்புதூரில் ஒரு வீட்டிற்குள் புகுந்து ஒரு பெண்ணின் தாலிக்கொடியை பிடுங்கிச் சென்றதாகவும், அந்த நகையை முத்தூட் பைனான்சில் அடமானம் வைத்ததாகவும் கூறினார். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஒப்புதல் வாக்குமூலம் கேள்வி-பதில் என்ற முறையில் அமைந்திருந்தா என்றால், இல்லை. எதிரி சொல்வது அப்படியே தட்டச்சு செய்யப்பட்டது. நான் போலீசார் வேண்டுகோளுக்கிணங்க காவல் நிலையத்திற்கு சென்று அவர்கள் தயார் செய்து வைத்திருந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தேன் என்று சொன்னால், சரியல்ல.

நீங்கள் சொல்வதுபோல் எதிரி தானாக முன்வந்து உங்கள் முன்னிலையில் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் தரவில்லை என்று சொன்னால், சரியல்ல.